# குளித்தலை நகராட்சி

2023ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 11.ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்-01. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட அண்ணாநகர் புறவழிச்சாலையில் வெட்டப்பட்ட மரக்கன்றுகளை ஏலம் விடுவதற்கு நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின்பேரில் 05.07.2023ஆம் தேதி புதன்கிழமை ஏலம் கோரப்பட்டதில், கீழ்கண்ட விவரப்படி ஏலம் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | மரக்கன்றுகளின் விவரம் | ஏலதாரர் பெயர் | ஏலத்தொகை ரூ. |
|---|---|---|---|
| 1) | புங்கன் மரக்கன்றுகள் (நான்கு எண்ணிக்கை) | திரு.பி.அண்ணாதுரை | 1000.00 |
| | | திரு.எம்.செந்தில்குமார் | 900.00 |

அலுவலக குறிப்பு- மேற்கண்ட ஏலதாரர்களில் உயர்ந்தபட்சமாக ஏலம் கோரிய திரு.பி.அண்ணாதுரை, குளித்தலை என்பவரின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.296/2022/இ1)

பொருள்-02. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட கொல்லம்பட்டரை தெருவில் காற்றினால் விழுந்த மரத்தினை ஏலம் விடுவதற்கு நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின்பேரில் 07.08.2023ஆம் தேதி திங்கட்க்கிழமை ஏலம் கோரப்பட்டதில், கீழ்க்கண்ட விவரப்படி ஏலம் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | மரங்களின் விவரம் | ஏலதாரர் பெயர் | ஏலத்தொகை ரூ. |
|---|---|---|---|
| 1) | வேப்பமரம் (ஒரு எண்ணிக்கை) | திரு.பி.அண்ணாதுரை | 1750.00 |
| | | திரு.எம்.செந்தில்குமார் | 1700.00 |

அலுவலக குறிப்பு- மேற்கண்ட ஏலதாரர்களில் உயர்ந்தபட்சமாக ஏலம் கோரிய திரு.பி.அண்ணாதுரை, குளித்தலை என்பவரின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.296/2022/இ1)

..2..

பொருள்- 03. குளித்தலை நகராட்சி அலுவலக வளாகத்தில் (பின்புறம்) எதற்கும் பயன்படுத்த இயலாத நிலையில் இருக்கும் பழைய சாமான்கள் (Scrap) உள்ளது. இதனை 14.07.2023ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் ஏலம் விடப்பட்டது. கீழ்க்கண்ட விவரப்படி ஏலம் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விவரம் | ஏலதாரர் பெயர் | ஏலத்தொகை ரூ. |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி அலுவலக வளாகத்தில் (பின்புறம்) எதற்கும் பயன்படுத்த இயலாத நிலையில் இருக்கும் பழைய சாமான்கள் (Scrap) ஏலம் விடுதல் | திரு.சி.திருவேங்கடம் | 6300.00 |
| | | திரு.எம்.சுரேஷ் | 6500.00 |

அலுவலக குறிப்பு- மேற்கண்ட ஏலதாரர்களில் உயர்ந்தபட்சமாக ஏலம் கோரிய திரு.எம்.சுரேஷ், குளித்தலை என்பவரின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.767/2023/இ1)

பொருள்- 04. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. இந்நிலையில் பேருந்து நிலையத்திற்குள் பேருந்துகள் வந்து செல்லும் வழியின் குறுகலான மையப்பகுதியில் அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு கடைகளை அகற்றி, நகராட்சியின் கடைகளுக்காக ஒதுக்கப்படும் இடத்தில் மேற்கண்ட இரண்டு கடைகளுக்கு மாற்று இடம் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் முடிவு செய்யலாம்.
(ந.க.எண்.672/2022/பி2)

பொருள்- 05. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வைகைநல்லூர் வடக்கு கிராமம் நகரளவை எண்.100/1ல், அண்ணாநகர் புறவழிச்சாலை தென்பகுதியில் நடைபாதை ஏற்படுத்த பேவர்பிளாக் அமைக்கும் பணி மேற்கொள்ள 236 அடி நீளம் 8 அடி அகலம் கொண்ட 1888 சதுரடி(236x8) அளவிலான இடம் தேவைப்படுகிறது. முன்னதாக இப்பகுதியில் சாலை அமைப்பதற்காக திரு.சீனிவாசன்(லேட்) என்பவருக்கு சொந்தமான இடத்தில், 236x15 சதுரடிக்கு, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்குகள் S.A.(MD)No.672 of 2016 and C.M.P.(MD)NO.10188 of 2016, தீர்ப்பு நாள்-01.02.2022ல் சதுரடிக்கு ரூ.374/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, அதனடிப்படையில், மேற்கண்ட நபருக்கு சொந்தமான இடத்தில் தற்போது நகராட்சிக்கு தேவைப்படும் 1888 சதுரடி(236x8) அளவிலான இடத்திற்கு(நிலம்) சதுரடிக்கு ரூ.374/- வீதம் ரூ.7,06,112/- ஆகும். எனவே, நடைபாதைக்கு தேவைப்படுகின்ற 1888 சதுரடி(236x8) அளவில், திரு.சீனிவாசனுக்கு(லேட்) சொந்தமான இடத்தினை(நிலம்) நகராட்சியின்மூலம் வாங்கி பணிகள் மேற்கொள்ளவும், இடத்திற்கான(நிலம்) செலவினம், பத்திர பதிவு மற்றும் இதர செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3087/2001/பி2)

*******

# குளித்தலை நகராட்சி

## குளித்தலை நகர்மன்றத்தின் 11.08.2023ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 224 | ஏற்கப்பட்டது. |
| 2 | 2 | 225 | ஏற்கப்பட்டது. |
| 3 | 3 | 226 | ஏற்கப்பட்டது. |
| 4 | 4 | 227 | பேருந்து நிலையத்தின் உள்பகுதியில் கடைக்கு இடம் ஒதுக்கிதர மன்றம் முடிவு செய்யப்பட்டது. |
| 5 | 5 | 228 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/-P.சகுந்தலா,
நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.